# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 117/மா/2023**

**நாள் : 24.05.2023**

திரு.T. செந்தமிழன், காட்பாடி,
வேலூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், வேலூர் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

வேலூர், காட்பாடி, வள்ளிமலை ரோடு, VTK நகர், கதவு எண்.25 என்ற முகவரியில் வசிக்கும் திரு. T. செந்தமிழன் அவர்களின் 13.03.2023 நாளிட்ட மனு 15.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 117/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

வேலூர், காட்பாடி, வள்ளிமலை ரோடு, VTK நகர், கதவு எண்.25 என்ற முகவரியில் வசிக்கும் திரு. T. செந்தமிழன் அவர்கள் தனது 13.03.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

" எங்கள் பகுதி வேலூர் மாநகராட்சி 3வது வார்டிற்குட்பட்டது. எங்கள் பகுதி CMC காலனியில் கால்வாய் பணியை மாநகராட்சி அதிகாரிகள் மேற்கொண்டனர். ஆனால் எந்தவிதமான முன்திட்டமிடுதல் இல்லாததால், கால்வாயில் ஆங்காங்கே தண்ணீர் தேங்குகிறது. அதிகாரிகளின் மெத்தனப்போக்கால் கால்வாய் பணி சரிவர அமையவில்லை. மேலும் இது தொடர்பாக மாநகராட்சி அதிகாரிகளிடம் ஒப்பந்ததாரர் யார் என்று கேட்டால் கவுன்சிலர் ஒருவரின் பெயரை குறிப்பிடுகின்றனர். ஒரு கவுன்சிலர் எவ்வாறு அரசு ஒப்பந்தப்பணிகளில் ஈடுபட முடியும்? இது விதிமுறைகளுக்கு முரணானது. இது குறித்து தாங்கள் விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவ 09.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 19.05.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 15.05.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**4. மனுதாரர் 19.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

" வேலூர் மாநகராட்சி 3வது வார்டுக்கு உட்பட்ட காட்பாடி சி.எம்.சி காலனியில் கால்வாய்ப் பணிகளை மாநகராட்சி அலுவலர்கள் மேற்கொண்டனர். கால்வாய்ப் பணிகளை சரிவர மேற்கொள்ளாததால் கால்வாயில் ஆங்காங்கே தண்ணீர் தேங்குகிறது. மாநகராட்சி அலுவலர்களின் மெத்தனப்போக்கினால் மேற்கண்ட காலவாய்ப் பணிகள் குறித்த காலத்தில் செய்தும் முடிக்கவில்லை. சரியாக மேற்கொள்ளப்படாத மழைநீர் கால்வாய்ப்பணிகளை, சரிவர முடித்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக்கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5. வேலூர் மாநகராட்சியின் உதவி பொறியாளர் 19.05.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

" மனுதாரர் குறிப்பிட்டுள்ள வேலூர் மாநகராட்சி 3வது வார்டுக்கு உட்பட்ட காட்பாடி சி.எம்.சி காலனியில் மழைநீர் கால்வாய்ப்பணிகள் 260 மீட்டர் நீளத்திற்கு, ரூ.10.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகள் தற்போதும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இன்னும் ஒரு மாத காலத்தில் முடிவடையும். பணிகள்முடிவடைந்த பின்னரே கால்வாயில் எங்கெங்கு தண்ணீர் தேங்குகின்றன என்பதை கண்டறிந்து அவற்றை உடனுக்குடன் மாநகராட்சியால் சரி செய்யப்படும் என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் வேலூர் மாநகராட்சி 3வது வார்டு, சி.எம்.சி. காலனியில் கால்வாய் பணியை மாநகராட்சி அதிகாரிகள் மேற்கொள்ளும்பொழுது எந்தவிதமான முன்திட்டமிடுதலும் இல்லாமல் பணியினை செய்ததால் ஆங்காங்கே கால்வாயில் தண்ணீர் தேங்குகிறது. இதற்கு அதிகாரிகளின் மெத்தனப்போக்கே காரணம் என்று தெரிவித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார்.

7. இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையிலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் 2014ல் கீழ்குறிப்பிட்டுள்ள பிரிவின்படி

12. (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

(d) Order other necessary remedial measures considering the facts and circumstances of the case: அடிப்படையிலும் இந்நிகழ்வில் வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

வேலூர் மாநகராட்சி 3வது வார்டுக்கு உட்பட்ட காட்பாடி சி.எம்.சி காலனியில் மழைநீர் கால்வாய்ப்பணிகள் 260 மீட்டர் நீளத்திற்கு ரூ.10.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அந்தப்பணிகள் தற்போதும் நடைபெற்று வருகின்றன எனவும் இப்பணிகள் இன்னும் ஒரு மாத காலத்தில் முடிவடையும் எனவும், பணிகள் முடிவடைந்த பின்னரே கால்வாயில் எங்கெங்கு தண்ணீர் தேங்குகின்றன என்பதை கண்டறிந்து அவற்றை உடனுக்குடன் மாநகராட்சியால் சரிசெய்யப்படும் என வேலூர் மாநகராட்சி உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி மழைநீர் கால்வாயில் தண்ணீர் தேங்காமல் உரிய முறையில் சரி செய்திடவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை 45 நாட்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அறிக்கையாக சமர்ப்பிக்கும்படி வேலூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. T. செந்தமிழன்,
   25, VTK நகர்,
   வள்ளிமலை ரோடு,
   காட்பாடி –7.
   வேலூர்.

2. ஆணையர்,
   வேலூர் மாநகராட்சி,

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்